செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. } சுற்.நிருப இல : 2015/06 (T)

உமது இல / ඔබේ අංකය / Your No. }

திகதி / දිනය / Date } 22/06/2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலைகளின் அதிபர்கள்

# வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை

வட மாகாணக் கல்விச் செயற்பாடுகளை மிகவும் பயன்மிக்கதாக மேற்கொள்ளக்கூடியவாறும் மாணவர்களினதும் மற்றும் ஆசிரியர்களினதும் உயர்ந்த பட்ச நலன்புரிச் செயற்பாடுகளுக்கு பொருந்தக்கூடியவாறும் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கையை தயாரிக்க வேண்டுமென வடமாகாண சபை தீர்மானித்துள்ளது. இதனடிப்படையிலே இம்மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கை கீழ்க்குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென வட மாகாண சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. **வடமாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.**

1.1 கல்வியானது, சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களைக் கேந்திரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது மாணவர்களின் கற்றல் தேவைக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

1.2 கல்வியின் பண்புசார் விருத்திப்பணியை நிலையாகப் பேணுவதற்கு ஆசிரியர்களின் அறிவு, திறமை மற்றும் சிந்தனை அடிப்படையாக இருப்பதனால் **ஆசிரிய இடமாற்றத்தின்** மூலம் ஆசிரியர்களுக்கு தமது அறிவு மற்றும் திறமையினை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

**1.3** ஆசிரியர்களின் தொழில் பாதுகாப்புத் தொடர்பான நம்பிக்கையை உறுதி செய்யக்கூடிய முறையில் மற்றும் சுதந்திரமான கற்பித்தல் வெளிப்பாடு, அநீதியான ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக தேவையற்ற அச்சமின்றி சேவையாற்றக்கூடியவாறும் மற்றும் சேவைத்திருப்தியை உயர்ந்தபட்சம் அடையக்கூடியவாறும் **ஆசிரிய இடமாற்றம் அமைதல் வேண்டும்.**

1.4 கல்வி தொடர்பாகப், பிரதேச ரீதியில் காணப்படும் வேறுபாடுகளை முடியுமான அளவு கட்டுப்படுத்தி மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்வதே **ஆசிரிய இடமாற்றத்தின்** அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

1.5 ஏதாவதொரு பிரதேசத்திற்கு மற்றும் பாடசாலைக்கு வரையறுக்கப்பட்டுள்ள ஆசிரிய வளங்களை வட**மாகாணத்தின்** ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பிரயோசனமான முறையில் ஆசிரிய சேவையிலுள்ள மனித வளங்களை நியாயமான முறையில் பகிரப்படுவதனை **ஆசிரியர் இடமாற்றத்தின்** மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.6 ஒரு பிரதேசத்தில் அல்லது பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்றுவதன் மூலம் ஏற்படக்கூடிய ஒருதலைப்பட்ச நிலைமை ஆசிரிய தொழில் விருத்திக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதனால், பல்வேறுபட்ட பிரதேசங்கள் பல்வேறுபட்ட சமூக பொருளாதார மற்றும் கலாசார சூழல்களில் உள்ள கல்லூரிகளின் சேவைக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் பல்வேறுபட்ட அனுபவங்களை பெற்றுக் கொண்டு தமது செயற்றிறனை விருத்தி செய்வதற்கும் சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

1.7 இத்துறையில், **ஆசிரிய** வளத்தை முறையான முகாமைத்துவத்தின் கீழ் உயர்ந்த பட்ச செயற்றிறனை **அடைவதற்கு இக்கொள்கை மூலம் சந்தர்ப்பம்** வழங்கப்படல் வேண்டும்.

செயலாளர் / ලේකම් / Secretary } 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office } 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax } 021-2220794

1.8 வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை விரிவான மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் ஆசிரியர் இடமாற்றச்சபை மூலம் அமுல்படுத்த வேண்டும்.

## 2. வடமாகாண ஆசிரியர் இடமாற்றச்சபை

### 2.1 வடமாகாண ஆசிரியர் இடமாற்றச்சபை உருவாக்கம்

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட மட்டங்களில் ஆசிரியர் இடமாற்றச் சபைகளை உருவாக்கி அமுல்படுத்த வேண்டும்.

1. வலயக்கல்வி அலுவலகம்
2. மாகாணக் கல்வித் திணைக்களம்
3. மாகாண கல்வி அமைச்சு

#### 2.1.1 வடமாகாணத்துக்குள்ளான ஆசிரியர் இடமாற்ற எண்ணிக்கையை தீர்மானிக்கும் சபை

வட மாகாணத்துக்குள்ளான ஆசிரியர் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் சபையாக கருதப்படுவது, ஆசிரிய இடமாற்றத்தை மேற்கொள்ளும்போது அந்தந்த வலயங்களுக்கிடையிலான இடமாற்றம் மேற்கொள்ள முடியுமான ஆசிரிய இடமாற்ற எண்ணிக்கை குறித்து இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக வட மாகாண கல்வி அமைச்சினால் நிறுவப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் கொண்ட சபையாகும்.

1. வட மாகாண கல்விச் செயலாளர்
2. வட மாகாணக் கல்விப் பணிப்பாளர்
3. வட மாகாண சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
4. வட மாகாண இடமாற்றச்சபை அங்கத்தவர்கள்
5. வட மாகாண இடமாற்றச்சபையின் தொழிற்சங்கப்பிரதிநிதிகள்

மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இச்சபையின் கூட்டத்திற்கு சமூகமளிக்காத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இவ்வுத்தியோகத்தரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பிரதிநிதிகளை பங்கேற்கச் செய்யமுடியும். வட மாகாணத்துக்குள்ளே ஆசிரியர் இடமாற்றம் மேற்கொள்ளமுடியுமான ஆசிரிய எண்ணிக்கை அவ்வவ் வகைகளுக்கான உறுதிப்படுத்தும் பணி இச்சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். பின்னர் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அமைக்கப்படும் இடமாற்றச்சபையினால், அவ்வெவ் எண்ணிக்கைக்குரியதாக மேற்கொள்ளப்படும் ஆசிரிய இடமாற்றத்திற்காக ஆசிரிய இடமாற்றப் பரிந்துரை வழங்கப்படும்.

### 2.2. வடமாகாணத்துக்கு வெளியான மற்றும் தேசிய பாடசாலைக்கான இடமாற்றங்கள்

வட மாகாணத்திற்கு வெளியேயான மற்றும் தேசிய பாடசாலைகளுக்கான இடமாற்றங்கள் வட மாகாண இடமாற்றச்சபையின் பரிசீலணைக்கு உட்படுத்தப்பட்டு, உரிய வழிமுறைகளின் ஊடாக வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.

### 2.3 வடமாகாண ஆசிரிய இடமாற்றச் சபையின் உள்ளடக்கம்

தாபன விதிக்கோவையின் 111 வது வாசகத்தின் 3.5வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய இருக்க வேண்டும். அவ்வாறாயின்

2.3.1. இவ்வடமாகாணத்தின் ஆசிரிய இடமாற்றச்சபையில் நிர்வாகப் பிரிவின் ஐந்து பிரதிநிதிகள் ( அதாவது மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மற்றும் திணைக்களத்தின் இப்பணிகளுக்குப் பொறுப்பான இரு பதவிநிலை உத்தியோகத்தர்கள், கல்வி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்) மூலமும்

அ) திணைக்களத்தின் அல்லது வடமாகாண ஆசிரிய சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையில் 15 % அல்லது அதனை விட அதிகமான உறுப்பினர்கள் கொண்ட மேற்கூறப்பட்ட திணைக்களத்திற்கு அல்லது சேவைக்குரிய அவ்வவ் தொழிற்சங்கங்களின் பிரதிநிதி

அல்லது

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக முழுமையான காலம் உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டுள்ள அவ்வவ் தொழிற்சங்கங்களின் பிரதிநிதி ஒருவரையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

### 2.3.2. வடமாகாண ஆசிரிய இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் உள்ளடக்கம்

இடமாற்றச் சபையை பிரதிநிதித்துவப்படுத்திய இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களையும், வேறு திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரையும் இடமாற்றச்சபையில் அங்கம் வகித்த ஒவ்வொரு தொழிற்சங்கங்கள் சார்பான ஒரு பிரதிநிதியையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

### 2.4 வலய ஆசிரிய இடமாற்றச் சபையின் உள்ளடக்கம்

வலயக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலர்கள், நிர்வாக உத்தியோகத்தர், இடமாற்றச்சபையில் அங்கம் வகிப்பதற்குத் தகமையுடைய ஒவ்வொரு தொழிற்சங்கம் சாரப்பிலான ஒரு பிரதிநிதி (வலயத்தினது மொத்த ஆசிரியர் எண்ணிக்கையில் குறைந்தது 15% அங்கத்தினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் தொழிற்சங்கப் பிரதிநிதி)

### 2.4.1. வலய இடமாற்ற மேன்முறையீட்டுச் சபையின் உள்ளடக்கம்

இடமாற்றச் சபையை பிரதிநிதித்துவப்படுத்திய இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களையும், வேறு திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரையும் இடமாற்றச்சபையில் அங்கம் வகித்த ஒவ்வொரு தொழிற்சங்கங்கள் சார்பான ஒரு பிரதிநிதியையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

### 2.5 வட மாகாண ஆசிரிய இடமாற்றச்சபையின் செயற்பாடுகள்

2.5.1. வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும் போது தாபன விதிக் கோவையின் 111வது வாசகத்தின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகளுக்கமைய மேற்கொள்வது அவசியமாகும்.

(தாபன விதிக் கோவையின் 111வது வாசகம்

**பிரிவு 3:1.** : இங்கு பிரிவு 3:2 இல் குறிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் நீங்கலாக இடமாற்றம் செய்யும் அதிகாரி இடமாற்றச் சபையின் ஆலோசனைக்கமையவே செயற்படுதல் வேண்டும். பிரிவு 3:2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் முற்றுமுழுதாக உரிய அதிகாரியின் தற்றுணிவின்படி இடமாற்றங்களைச் செய்யலாம்.

**பிரிவு 3:2.** : இடமாற்றச் சபைகள் பின்வரும் வகைசார் இடமாற்றங்கள் தொடர்பாக செயலாற்றக் கூடாது.

(i) நிலைய இடமாறுகை சம்பந்தப்படாத இடமாற்றமொன்று.
(ii) ஒழுக்காற்றுக் காரணம் பொருட்டான இடமாற்றமொன்று
(iii) சேவையின் அவசிய தேவை நோக்கிச் செய்யப்படும் இடமாற்றமொன்று.
(iv) இடமாற்றத்தக்க பணியாளர்கள் 25 பேரிலும் குறைந்த தொகையினரைக் கொண்ட திணைக்களமொன்றின் இடமாற்றங்கள்)

2.5.2. ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது அவர்களின் ஆக்கத்திறன் பல்வேறுபட்ட துறைகளில் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் பாடசாலையில் ஏற்படுத்திய அடைவுமட்டத்தை அடிப்படையாகக் கொள்ளக்கூடிய முறையில் இடமாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2.5.3. ஆசிரியர்களது சாதனைகள், அடைவுகளது விபரங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

## 3. ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விசேட விடயங்கள்/ அடைவு மட்டங்கள்

ஆசிரிய இடமாற்றத்தை மேற்கொள்ளும்போது கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் அடைவு மட்டங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும்.

### 3.1 பாடசாலை வகைப்படுத்தல்

இல ED/3/37/9/2/3(I) மற்றும் **2005.01.18ம் திகதிய 2005/1 கொண்ட சுற்றறிக்கையின் 03ம் வாசகத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகள்**

(i) மிக வசதியான பாடசாலை
(ii) வசதியான பாடசாலை
(iii) வசதி குறைந்த பாடசாலை
(iv) கஷ்டப் பாடசாலை
(v) அதிகஷ்டப் பாடசாலை

என 5 வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்துவதன் தேவையின் அடிப்படையில் சகல இடமாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

### 3.2 சேவைக்காலம் தொடர்பான விடயங்கள்

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையியற் குழுவினால் பெயரிடப்படும் பாடசாலை ஒன்றில் ஆகக் **குறைந்தபட்ச சேவைக்காலம்** சகல ஆசிரியர்களும் சேவையாற்றியிருக்க வேண்டும். அக்காலத்தினைப் பூர்த்தி செய்த பின்னரே இடமாற்றம் கோரமுடியும். இடமாற்றம் கோரும் வலயத்தில் குறித்த பாட வகுதிக்கு வெற்றிடம் இருப்பின் மட்டுமே குறித்த வலயத்துக்குட்பட்ட பாடசாலைக்கு இடமாற்றம் பெற முடியும்.

i. அதிகஷ்ட பாடசாலை - 05 வருடங்கள் (குறைந்தபட்சம்)
ii. கஷ்ட பாடசாலை - 06 வருடங்கள் (குறைந்தபட்சம்)
iii. வசதி குறைந்த பாடசாலை - 07 வருடங்கள் (குறைந்த பட்சம்)
iv. வசதியான பாடசாலை - 06 வருடங்கள் (ஆகக் கூடியது)
v. மிகவசதியான பாடசாலை - 06 வருடங்கள் (ஆகக் கூடியது)

இதனடிப்படையில் ஆசிரியர்களின் சேவைக் காலத்தை கணிப்பிடப்படல் வேண்டும்.

3.2.1 பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளும் கொள்கை அடிப்படையில் அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய நியமிக்கப்பட்ட பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டிய முழுக்காலத்தையும் பூரணப்படுத்த வேண்டும்.

### 3.3 கஷ்டப் பாடசாலையின் சேவைக் காலத்தை ஊக்குவித்தல்

மேற்கூறப்பட்ட வகைப்படுத்தலுக்கமைய கஷ்ட அல்லது அதிகஷ்ட பாடசாலை ஒன்றில் கட்டாய சேவைக்காலத்தை சகல ஆசிரியர்களும் பூரணப்படுத்த வேண்டியதுடன் அக்கட்டாய சேவைக்காலத்திற்குப் பின்னர் அதிகஷ்ட அல்லது கஷ்ட பாடசாலையொன்றில் சேவையாற்றும் ஆசிரியர் ஒருவருக்கு கஷ்ட பாடசாலை சேவைக் கொடுப்பனவு வழங்க வேண்டும். இக்கொடுப்பனவு கஷ்ட அல்லது அதிகஷ்டப் பாடசாலையில் சேவையாற்றும் காலம் வரை மாதாந்தம் செலுத்த வேண்டியதுடன் அதற்காக 2008.10.18ம் திகதிய 2005/02 சுற்றறிக்கை மூலம் மற்றும் 2006/44 சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளை பின்பற்ற வேண்டும். இதனடிப்படையில் அதிகஷ்ட பாடசாலை ஒன்றின் சேவைக்காக ஆசிரியர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா. 2500 ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கஷ்டப் பாடசாலை ஒன்றின் சேவைக்காக மாதாந்தம் ரூபா.1500 கொடுப்பனவும் செலுத்த வேண்டும். இருப்பினும் கல்விச் செயலாளரினால் கஷ்ட அல்லது அதிகஷ்ட பாடசாலையின் சேவை தொடர்பில் இடைக்கிடையே வழங்கப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் இதற்கு மேலதிகமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

### 3.4 ஏனைய விடயங்கள்

(i) 55 வயதுக்குட்பட்ட சகல ஆசிரியர்களும் இடமாற்றத்திற்கு தகுதியுடையவர்கள்

(ii) 55 – 57 வயதுக்கு இடைப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்களின் கோரிக்கையின்றி இடமாற்றங்களை மேற்கொள்ளகூடாது. சேவையின் தேவை கருதி குறித்த ஆசிரியரின் சம்மதத்துடன் வலயங்களினுள்ளே இடமாற்றம் வழங்க முடியும்.

(iii) 57 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் விருப்பமின்றி இடமாற்றம் செய்யமுடியாது.

(iv) மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவரினால் இடமாற்றம் கோரும்போது தமது மருத்துவ காரணங்களை உறுதி செய்வதற்காக அரச வைத்திய சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பாக அவரின் விருப்பின்றி இடமாற்றம் செய்யக்கூடாது. இது எவ்வாறாக இருப்பினும் கர்ப்பிணித் தாய்மார்களினால் இடமாற்றம் கோரும்போது செயற்பட வேண்டியது வைத்திய அறிக்கை மூலம் உறுதிசெய்யப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.
மகப்பேற்றின் பின்னர் தாய் ஒருவருக்கு பிள்ளை கிடைத்து ஒரு வருட காலம் வரை தமது நிரந்தர வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைக்கு தற்காலிகமாக இணைத்துக்கொள்வதற்கான உரிமையை வழங்கமுடியும். இதற்காக ஆசிரிய தாய்மார்களால் கோரிக்கை சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும். ஆசிரியரின் சொந்த மருத்துவ காரணங்களுக்கு மேலதிகமாக ஆசிரியருடன் இணைந்துள்ள ( ஆசிரியரில் தங்கி வாழுகின்ற) நேரடியாக அழுத்தங்களை விடுக்கக்கூடிய கீழ்க் குறிப்பிட்ட குடும்பத்தின் அங்கத்தவர்களின் மருத்துவ சுகாதார நிலைமை இடமாற்றம் பெறுவதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

1. வாழ்க்கைத்துணை
2. பிள்ளைகள்
3. பெற்றோர்/ வாழ்க்கைத்துணையின் பெற்றோர்.

(v) முதல் நியமனக் கடிதம்

ஆசிரியராக சேர்த்துக் கொள்ளும்போது வழங்கப்பட்ட முதல் நியமனம் கஷ்ட, அதிகஷ்ட வகைக்குரிய பாடசாலையில் உரிய குறைந்தபட்ச கால எல்லையின் கீழ் அவ்வாறான பாடசாலை வழங்கப்பட வேண்டியதுடன் குறைந்த பட்ச சேவைக்காலத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் அவ்வாசிரியர் தாம் விரும்பிய

பாடசாலைக்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியினைப் பெற்றுக் கொள்வார்.

(vi) இவ் வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் கீழ் சகல ஆசிரியரும் இடமாற்ற சபையினால் தமது பணிகளுக்குரியதான செயற்பாட்டு கோவைகளைத் தயாரித்து அதனடிப்படையில் செயற்படும் கொள்கை அடிப்படையில் இருக்க வேண்டும். மிக வசதியான, வசதியான பாடசாலைகளுக்கு இடமாற்றம் கோரும் போது ஆசிரியர்களது செயற்சாதனைகள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். (அதற்கான அறிக்கைகள் அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

(vii) மேலதிக மற்றும் பாட இணை ஆசிரிய சமநிலைக்காக அவ்வவ் பாடங்களுக்காக தொடர்புபட்ட ஆசிரிய சமநிலைப்படுத்தலுக்காக அவ்வப் பாடங்களுக்கான விடயப்பணிப்பாளர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் மூலம் பெறப்படும் பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக மற்றும் பாட இணைச் செயற்பாடுகள் கொண்ட ஆசிரியர்கள் சமநிலைப்படுத்தும் பணிகளுக்காக பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அச்சமநிலைப்பணிகள் ஆசிரிய இடமாற்றச் சபையினால் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மேலதிகத்தை இனங்காணும் முறைகளை தயாாரிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர் இடமாற்றச் சபையின் பிரதிநிதிகளினால் பொருத்தமான நடவடிக்கைகள் தயாரிப்பது அவசியமானதாகும். அம்முறைகள் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இருக்க வேண்டும். அதிபர் மற்றும் மேலதிக ஆசிரியர்களினால் பூரணப்படுத்தப்பட்ட தகவல் படிவம் மேலதிக ஆசிரியர்களை சமநிலைப்படுத்தும் போது அடிப்படையாகக் கொள்ள வேண்டும். அத்தகவல்களைக் கருத்திற் கொண்டு ஆசிரிய இடமாற்றச் சபையினால் இடமாற்றம் வழங்க வேண்டியதுடன் அது தொடர்பான மேன்முறையீடு சமர்ப்பிப்பதற்காக ஆசிரியருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

(viii) இடமாற்றம் பெற்ற ஆசிரியர் அவ்விடமாற்றத்திற்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் அம்மேன்முறையீட்டுக்கான பதில், மேன்முறையீட்டுச் சபையிலிருந்து கிடைக்கும் வரை தற்போது சேவையாற்றும் பாடசாலையில் சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானம் இடமாற்றம் பெற்ற தினம் தொடக்கம் ஒரு மாதத்திற்குள் உரிய ஆசிரியருக்கு பதில் வழங்கப்படல் வேண்டும்.

(ix) மேலதிகத்தை இனங்காணுதல் 3.2 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ள வேண்டியதுடன் பாடசாலைகளில் தொடர்ந்தும் மேலதிக ஆசிரிய எண்ணிக்கை ஏற்படக் கூடியவாறு ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது.

## 4. இடமாற்றம் மேற்கொள்ளும் கால எல்லை

மேற்கூறப்பட்ட 2.5 வாசகத்தின் விசேடமாகக் கூறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர சகல சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்றச் செயற்பாடுகள் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படக் கூடிய கஷ்டங்களை மட்டுப்படுத்தக் கூடிய வகையில் ஆசிரிய இடமாற்றச் செயற்பாடுகள் சகல ஆண்டுகளிலும் மே மாதம் 31 ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் மாதம் 1 ஆந் திகதி முடிவுறுத்தல் வேண்டும். அடுத்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல் படுத்துதல் வேண்டும்.

### 4.1 வட மாகாண ஆசிரிய இடமாற்றச் செயற்பாடுகளுக்குரிய கால எல்லை

வருடாந்த ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்வதற்கான உரிய கால எல்லை கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| இல | விடயங்கள் | கால எல்லை |
|---|---|---|
| 01 | ஆசிரிய இடமாற்றங்களின் உரிய சகல தகவல்களையும் திரட்டுதல் | மே 31 ற்கு முன்னர் |
| 02 | ஆசிரிய இடமாற்ற விண்ணப்பப் படிவங்களைக் கோரல் | ஜுன் 1 - ஜுன் 30வரை |
| 03 | இடமாற்றச் சபையின் கூட்டத்தை நடாத்தல் | ஜுலை 1 - ஜுலை 31வரை |
| 04 | ஆசிரிய இடமாற்றச்சபைகளின் பரிந்துரையைப் பெறல் | ஆகஸ்ட் 01 – ஆகஸ்ட் 15 வரை |
| 05 | இடமாற்றக் கடிதத்தை வழங்கல் | செப். 15- செப் 30 வரை |
| 06 | மேன்முறையீடுகளைப் பொறுப்பேற்றல் | ஒக்.1 – ஒக்.15 வரை |
| 07 | மேன்முறையீட்டுச் சபைகளின் தீர்மானங்களைப் பெற்றுக் கொள்ளல் | நவம். 1 ற்கு முன்னர் |

வலய, மாகாண இடமாற்றச்சபைகளின் இடமாற்றத் தீர்மானங்கள் உரிய காலத்தில் இணையத்தளத்தில் வெளியிடப்படல் வேண்டும்.

பொதுவாக வருடாந்த ஆசிரிய இடமாற்றத்தைத் தவிர 2.5 இன் கீழ்க் குறிப்பிடப்பட்ட விசேட சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் ஆசிரிய இடமாற்றத்தை மிகவும் செயற்றிறனுடன் மற்றும் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில், அடிப்படை விடயங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு மேற்கூறப்பட்ட கால எல்லையைத் தவிர்த்து நடைமுறைப்படுத்த முடியும்.

1. இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக தாபன விதிக்கோவையின் 3 வது வாசகத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைவாக செயற்பட வேண்டும்.

2. இவ் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கை 2015.06.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தக்கூடியவாறு இடம்பெற வேண்டும். எனவே ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக செயற்படும் சகல உத்தியோகத்தர்களும் இக்கொள்கைக்கமைய செயற்பட வேண்டுமென அறிவிக்கின்றேன்.

3. இவ் வடமாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கை வடமாகாண சபை அமைச்சர் வாரிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற கொள்கை என்பதால், வலய மட்டத்தில் பிரதேச தேவைகளைக் கருத்திற்கொண்டு ஏதாவதொரு ஆசிரிய **இடமாற்றத் தீர்மானங்கள்** தயாரிப்பதாக இருப்பின் அதன் கொள்கையில் எவ்வித விடயமும் வடமாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு மேலோங்கியதாக அமையக்கூடாது.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்,
செயலாளர்.

பிரதிகள்:

(1) மத்திய கல்வி அமைச்சின் செயலாளர்
(2) வட மாகாணப் பிரதம செயலாளர்
(3) வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர்
(4) வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர்
(5) கணக்காய்வாளர் நாயகம்
(6) வட மாகாண திறைசேரிப் பிரதிப் பிரதம செயலாளர்
(7) ஆசிரியர் தொழிற்சங்கப் பொதுச் செயலாளர்கள்